# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1090/F/2024**

| | | |
|---|---|---|
| திரு.இரா.கோபிநாத் | .. | புகார்தாரர் |

/எதிர்/

| | | |
|---|---|---|
| பொதுதகவல் அலுவலர் /<br>கண்காணிப்பாளர்,<br>வட்டார வளர்ச்சி அலுவலர்,<br>உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம்,<br>செங்கல்பட்டு மாவட்டம். | .. | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.இரா.கோபிநாத் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2012, விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திரு.K.V.சீனுவாசன், வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ், 02/01/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் செங்கல்பட்டு மாவட்டம் இலத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு எல்லைக்குட்பட்ட நெடுமரம் ஊராட்சியின் தணிக்கை தொடர்பான உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகத்திற்கு கடந்த 01.04.2016 முதல் 31.03.2020 வரை வரப்பெற்ற ஆவணங்கள் மற்றும் கோப்புகளில் அது தொடர்பாக நாள் வாரியாக எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகள் தொடர்பான ஒளி நகல்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 2J படி கள ஆய்வு செய்து தனக்கு

தேவையான தகவல் கோருவது தொடர்பாக 3 இனங்களில் தகவல்களை கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் ந.க. எண்.0008/2024/அ3, நாள் 05.01.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரரை அலுவலகத்தை களஆய்வு செய்து தேவையான தகவலைப் பெற கடிதம் அனுப்பியுள்ளார். இந்நிலையில் மனுதாரர் தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 18(1)ன் கீழ் 20.02.2024 நாளிட்ட புகார் மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 05.01.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் மனுதாரரை அலுவலகத்தை களஆய்வு செய்து தேவையான தகவலைப் பெற கடிதம் அனுப்பியுள்ளதாகவும் மேலும் மனுதாரர் 19.01.2024 அன்று அலுவலகத்திற்கு நேரில் சென்று களஆய்வு செய்து தகவலை பெற்றுக்கொண்டதாகவும் ஆணையத்திடம் தெரிவித்து அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (07.04.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, பொது அதிகார அமைப்பினால் 05.01.2024 தேதியிட்ட அறிவிப்பு கடிதம் மற்றும் மனுதாரர் களஆய்வு செய்து ஆவணங்களைப் பெற்றதற்கான ஆதாரங்களையும் உறுதி செய்து இந்த புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 1090/F/2024**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுதகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
வட்டார வளர்ச்சி அலுவலர்,
உதவி இயக்குநர் (தணிக்கை) அலுவலகம்,
செங்கல்பட்டு மாவட்டம்.

**<u>புகார்தாரர்:-</u>**

திரு.இரா.கோபிநாத்,
7/113, முத்தாலம்மன் கோவில் தெரு,
சதுரங்கப்பட்டினம் கிராமம்,
செங்கல்பட்டு-603102.

Copy to file: KR/PA